பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

17 02 2025 **MONDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வேளாண் துறையில் தொழில்நுட்ப மாற்றங்களை கொண்டுவர வேண்டியது அவசியம் என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

2. மாற்றுத்திறனாளிகளுக்கான அடிப்படை வசதிகளை செய்துதர அதிக அளவிலான தனியார் தொண்டு நிறுவனங்கள் முன்வர வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

3. பொதுத்தேர்வு வினாத்தாள் வெளியானதாக சமூக வலைதளங்களில் பரவிய தகவலை சிபிஎஸ்இ மறுத்துள்ளது.

4. லெபனானில் நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதலில் அந்நாட்டிற்கான ஹமாஸ் அமைப்பின் தலைவர் உயிரிழந்ததாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

5. மகளிர் பிரிமியர் லீக் டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் தில்லி அணிக்கு எதிராக பெங்களூரு அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

**<<<<>>>>>**

வேளாண் துறையில் தொழில்நுட்ப மாற்றங்களை கொண்டுவர வேண்டியது அவசியம் என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

பஞ்சாப் மாநிலம் மொஹாலியில் நவீன தொழில் முனைவோர் மற்றும் திறன் மேம்பாட்டுத்திட்டத்தை தொடங்கிவைத்து பேசிய அவர், இந்தியாவின் ஆன்மா கிராமங்களில் உள்ளதாக கூறினார்.

கிராமங்களின் வளர்ச்சியின் மூலமாகவே, வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான பாதையை வகுக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

வளர்ச்சியடைந்த இந்தியா என்பது இனி ஒருபோதும் கனவாக இருக்காது, அது நமது இலக்கு என்றும் குடியரசு துணைத்தலைவர் தெரிவித்தார்.

தாம் ஒரு விவசாய குடும்பத்தில் இருந்து வந்ததால், விவசாயிகளின் நிலையை நன்கு உணர்ந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

வேளாண்துறையில் ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் அவசியமானது என்றும், நவீன தொழில்நுட்பங்களை விவசாயத்துறையிலும் அறிமுகப்படுத்த வேண்டியது அவசியம் என்றும் திரு ஜெக்தீப் தங்கர் குறிப்பிட்டார்.

**<<<<>>>>>**

பொருளாதார சீர்திருத்தத்தை மத்திய அரசு தொடர்ந்து முன்னெடுத்து செல்லும் என்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட புதிய வருமானவரி திருத்த மசோதா தொடர்பாக நாடு முழுவதும் இருந்து 60 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தங்களது கருத்துக்களை தெரிவித்திருப்பதாக கூறினார்.

வருமான வரி செலுத்துவோர் பயனடையும் வகையில், ஆண்டுக்கு 12 லட்சம் ரூபாய் வரை வரி விலக்கு அளிக்க அனுமதி வழங்கிய பிரதமருக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும் நிதியமைச்சர் கூறினார்.

கடந்த இரண்டாண்டுகளில் விண்வெளி, அணுசக்தி போன்ற துறைகளில் அரசு அதிக முதலீடுகளை செய்திருப்பதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<>>>>>

மாற்றுத்திறனாளிகளுக்கான அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதற்கு அதிக அளவிலான தனியார் தொண்டு நிறுவனங்கள் முன்வர வேண்டும் என்று மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் மாற்றுத்திறனாளிகளுக்கான ஆணையர் திரு எஸ். கோவிந்தராஜ் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் வேலூரில் இன்று மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூத்த குடிமக்கள் எளிதில் பயணம் செய்யும் வகையில் தனியார் அறக்கட்டளையின்மூலம், பயண சேவையை தொடங்கிவைத்தபின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

வேலைவாய்ப்பு மற்றும் பொது இடங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு இடஒதுக்கீடு இருந்தபோதிலும், அவர்கள் பொது இடங்களில் சென்று வருவதற்கு ஏதுவாக, இதுபோன்ற சேவைகளை தனியார் தொண்டு நிறுவனங்கள் அதிக அளவில் மேற்கொள்ள முன்வர வேண்டும் என்றும் திரு எஸ். கோவிந்தராஜ் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>>

ஊரக மேம்பாட்டு அமைச்சகத்தின் பெயரில் ஆள் சேர்ப்பு இயக்கம் நடத்தப்படுவதாக பரவி வரும் போலியான விளம்பரங்கள் குறித்து அந்த அமைச்சகம் மறுப்பு தெரிவித்துள்ளது.

தேசிய ஊரக மேம்பாடு மற்றும் புத்துணர்ச்சி இயக்கம் என்ற பெயரிலான அலுவலகம் புதுதில்லியில் உள்ள டாக்டர் ராஜேந்திர பிரசாத் சாலையில் இயங்குவதாகவும், ஆள் சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் கூறி இணையதளங்களையும் நடத்தி வருவதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

எனினும், இது மத்திய அரசின் ஊரக மேம்பாட்டு அமைச்சகத்தின்கீழ் செயல்படும் அமைப்பு கிடையாது என்றும், ஆள் சேர்ப்புக்கான எந்த ஒப்புதலையும் அமைச்சகம் வழங்கவில்லை என்றும் அந்த செய்திக்குறிப்பு மேலும் தெரிவிக்கிறது.

<<<<>>>>>

பொதுத்தேர்வு வினாத்தாள் வெளியானதாக சமூக வலைதளங்களில் பரவிய தகவலை சிபிஎஸ்இ மறுத்துள்ளது.

இதுபோன்ற வதந்திகளை சிலர் வேண்டுமென்றே வெளியிட்டு வருவதாகவும் அந்த தகவல்கள் ஆதாரமற்றவை என்றும் சிபிஎஸ்இ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் மற்றும் பெற்றோர் இடையே தேவையற்ற பீதியை உருவாக்கும் நோக்கில், வெளியாகும் இதுபோன்ற தகவல்களை நம்ப வேண்டாம் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

**<<<<>>>>>**

இந்தியா வந்துள்ள பிரிட்டன் முன்னாள் பிரதமர் திரு ரிஷி சுனக், புதுதில்லியில் இன்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கரை சந்தித்து பேசினார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு ஜெய்சங்கர், இந்தியா – பிரிட்டன் இடையேயான நல்லுறவுகளை வலுப்படுத்தவதற்கு திரு ரிஷி சுனக் அளித்த தொடர் ஆதரவுக்கு தாம் பாராட்டு தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

திரு ரிஷி சுனக்கை சந்தித்தது மிகுந்த மகிழ்ச்சி அளித்ததாகவும், பல்வேறு விஷயங்களை அவருடன் பகிர்ந்துகொண்டதாகவும் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

**<<<<>>>>>**

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள் . . . .

*(சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)*

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் மகா கும்பமேளாவிற்கு வரும் பக்தர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய மத்திய ரிசர்வ் காவல்படையினர் 24 மணிநேரமும் பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மிகப்பெரிய ஆன்மிக திருவிழாவான கும்பமேளா நடைபெறும் கங்கை நதி படித்துறைகள், திடல்கள், முக்கியமான வழித்தடங்கள் உள்ளிட்ட இடங்களில் சுழற்சி அடிப்படையில் சிஆர்பிஎஃப் வீரர்கள் நவீன தொழில்நுட்ப உதவியுடன் கண்காணிப்புப்பணியை மேற்கொண்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

எந்தவொரு அவசர சூழ்நிலையையும் சமாளிக்கும் வகையில் தயார் நிலையில் உள்ளதாகவும், பக்தர்களுக்கு வழிகாட்டுதல் உள்ளிட்ட உதவிகளையும் அவர்கள் செய்து வருவதாக அவர் மேலும் கூறுகிறார்.

கூட்டத்தில் குழந்தைகள் காணாமல் போனால், அவர்களை மீட்டு பெற்றோரிடம் ஒப்படைக்கும் அர்ப்பணிப்புடன் கூடிய சேவையையும் சிஆர்பிஎஃப் வீரர்கள் மேற்கொண்டுள்ளனர்.

இதற்கிடையே, காசி தமிழ் சங்கமம் நிகழ்ச்சியில் பங்கேற்க தமிழகத்திலிருந்து சென்றுள்ள குழுவினர் மகா கும்பமேளாவில் இன்று புனித நீராடினர்.

பின்னர், அயோத்தி சென்று ராமர் கோவிலில் வழிபாடு செய்தனர்.

திரிவேணி சங்கமத்தில் புனித நீராடியது மகிழ்ச்சி அளிப்பதாகவும், இதற்கான ஏற்பாடுகளை செய்த மத்திய அரசுக்கும், தமிழக குழுவினர் நன்றி தெரிவித்துக்கொண்டனர்.

*(சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)*

<<<<>>>>>

அனைத்துத்துறைகளிலும் தமிழகம் நாட்டிலேயே முதன்மை மாநிலமாக திகழ்கிறது என்று மாநில ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு ஐ பெரியசாமி தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் அருகே உள்ள எஸ. பாறைப்பட்டி உள்ளிட்ட கிராமங்களுக்கு ஜல் ஜீவன் திட்டத்தின்கீழ், குழாய் மூலம் குடிநீர் வழங்கும் நிகழ்ச்சியிலும், 34 லட்சம் ரூபாய் மதிப்பிலான புதிய வகுப்பறை கட்டிட திறப்பு விழாவிலும் அவர் பங்கேற்றார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், விதிமுறைகளை பின்பற்றி செயல்படுவதால் இந்தியாவிலேயே சிறந்த மாநிலம் என்ற பெயரை தமிழகம் பெற்றுள்ளதாக கூறினார்.

மக்கள் நலத்திட்டங்கள் அதிக அளவில் நிறைவேற்றப்படும் மாநிலமாக தமிழகம் விளங்குவதாகவும் திரு ஐ பெரியசாமி தெரிவித்தார்.

<<<<>>>>>

லெபனானின் தெற்கு பகுதியில் நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதலில் அந்நாட்டிற்கான ஹமாஸ் அமைப்பின் தலைவர் உயிரிழந்திருப்பதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

முகமத் ஷாஹீன் என்ற பெயரிலான அவர் லெபனான் எல்லையில் இருந்து தீவிரவாத தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்ததாக இஸ்ரேல் குற்றம் சாட்டியுள்ளது.

இஸ்ரேல் - **Hezbollah** இடையே கடந்த 14 மாதகால போரை முடிவுக்கு கொண்டுவர ஒப்பந்தம் ஏற்பட்டுள்ள நிலையில், தெற்கு லெபனானில் இருந்து முழுமையாக இஸ்ரேல் படைகளை திரும்பப்பெறும் வேளையில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

மகளிர் பிரிமியர் லீக் டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் தில்லி அணி - பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

வதோதராவில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள இப்போட்டியில், டாஸ் வென்ற பெங்களூரு அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

--------

ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியின் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் குஜராத் அணிக்கு எதிராக, கேரளா அணி முதல் நாள் ஆட்டநேர இறுதியில் 4 விக்கெட் இழப்பிற்கு 206 ரன் எடுத்துள்ளது.

அகமதாபாத்தில் இன்று தொடங்கிய இப்போட்டியில் டாஸ் வென்ற கேரளா அணி முதலில் பேட் செய்ய தீர்மானித்தது.

மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில், மும்பை அணிக்கு எதிராக விதர்பா அணி இன்றைய ஆட்ட நேர இறுதியில் 5 விக்கெட் இழப்பிற்கு 308 ரன் எடுத்துள்ளது.

நாக்பூரில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் விதர்பா அணி டாஸ் வென்று பேட்டிங்கை தேர்வு செய்தது.

**<<<<END>>>>>**